1982 ஏப்ரல் 1]

சென்னையில் Point to Point பேருந்துகள் விடும் திட்டம்

*வினா எண். 715.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் Point to Point பஸ்களை விட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ): இம் மாதிரியான பேருந்துகளை சென்ட்ரல்—புரசைவாக்கம் மற்றும் சென்ட்ரல்—திருவல்லிக்கேணி ஆகிய தடங்களில் 5—1—1982 முதல் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) இயக்கி வருகிறது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, இப்போது ஒரு சில வழித்தடங்களில் பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப் படுவதாகச் சொல்கிறார்கள். பீக்ஹவர்ஸிலே அதிகப் பயணிகள் நெரிசல் இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு இடங்களில் இந்த பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா ? தற்போது இந்த பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுவதால் டாக்ஸி, ஆட்டோ கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று நினைக்கின்ற பயணிகள் பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸைப் பயன்படுத்து வார்கள். ஆகவே பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா? இங்கே தலைமைச் செயலகத்திலே ஆயிரக்கணக்கான அலுவலர் களும் மற்றவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் திருவல்லிக் கேணிக்கும், மயிலாப்பூருக்கும், கோடம்பாக்கத்திற்கும், தி. நகருக்கும், சைதாப்பேட்டைக்கும் போய்வரக் கூடிய முறையிலே பாயின்ட் டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1974 ஆம் ஆண்டே இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து அது சரியாகச் செல்வாக்குப் பெற வில்லை என்ற காரணத்தினால் அந்த ஆண்டு திரும்பப் பெறப் பட்டுவிட்டது. அதற்குப் பின்னாலே ஒரு முறை கொண்டு வரப்பட்டு மீண்டும் திரும்பப் பெற்றுவிட்டார்கள். அதற்குப் பிறகு இப்போது ஒரு சில வழித்தடங்களில் விடப்படுகின்றன. அவை எவ்வாறு ஓடிக்கொண்டிருக்கின்றன என்பது பற்றி ஆராயப்படுகிறது. இரண்டு, மூன்று தடங்களில் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அவற்றில் ஒரு வழித் தடத்தில் வெற்றிபெற்ற தாகச் சொல்லப்படுகிறது, மற்றவற்றைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

[1982 ஏப்ரல் 1

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டைப்பற்றிச் சொல்கிறார்கள். நாளுக்கு நாள் பேருந்து களிலே செல்கிற மக்கள் தொகை அதிகமாகிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் பாயின்ட்டு பாயின்ட் சர்வீஸ் விடுவது அவசியமாக இருக்கிறது. தற்போது எக்ஸ்பிரஸ் சர்வீஸ் விடப்பட்டு அதிலே சாதாரண கட்டணத்தைவிட $1\frac{1}{2}$ மடங்கு வசூலிக்கிறார்கள். சூப்பர் எக்ஸ்பிரஸ் பேருந்துகளில் இரண்டு மடங்கு கட்டணம் வசூலிக்கிறார்கள். அவைகள் எல்லாம் பல தடங்களிலே ஆள் இல்லாத நிலைமையிலே நட்டத்திலே ஓடிக்கொண்டு இருக்கின்றன என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அதையெல்லாம் தவிர்த்து எல்லா வழித்தடங்களிலும் பாயின்ட்டு பாயின்ட் சர்வீஸ் விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டிலேயிலிருந்து ஜனத்தொகை வளர்ந்திருக்கிறது. பேருந்துகளின் எண்ணிக்கையும் வளர்ந்திருக்கிறது என்பதை மறுக்கமாட்டார்கள். ஏற்கெனவே பாயின்ட்டு பாயின்ட் சர்வீஸ் விடுவதுபற்றிச் சொன்னேன். எந்த எந்த வழித்தடங்களில் மக்களுக்கு அதிகமாகப் பயன்படுகின்ற நிலைமை இருக்கிறது, செல்வாக்கு எந்த இடத்திலே இருக்கிறது என்பதைத் தெரிந்து சில வழித்தடங்களிலே செய்திருக்கிறோம். இன்றைய தினம் 2 வழித்தடங்களிலே விட்டுக்கொண்டிருக்கிறோம்.

திருவண்ணாமலை வட்டத்தில் பேருந்துகள் விடும் திட்டம்.

*வினா எண் 716—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டம், திருவண்ணாமலை—மதுராம்பட்டு, கல்லேரி—தண்டராம்பட்டு, திருவண்ணாமலை—கண்டியாங்குப்பம் ஆகிய வழித்தடங்களில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள் விடக்கோரி அப்பகுதி கிராம மக்களிடமிருந்து வந்துள்ள விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : திருவண்ணாமலை—மதுராம்பட்டு வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு தற்பொழுது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் ஆய்வில் இருக்கின்றது. கல்லேரி—தண்டராம்பட்டு மற்றும் திருவண்ணாமலை—கண்டியாங்குப்பம் ஆகிய வழித்தடங்களில் பேருந்து விடும்படி கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக அலுவலகத்திற்கு வரவில்லை.